தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**பருவ நிலை சமன்பாட்டை சரி செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு! மரங்கள் வளர்க்க எக்டேருக்கு ரூ.20 ஆயிரம் மானியம்**

கல்லல் : பருவநிலையில் மாற்றம் ஏற்படாமல் இருக்க மரங்களை வளர்க்க விவசாயிகளுக்கு வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டில் பருவ நிலையில் மாற்றம் ஏற்படாமல் இருக்க காடுகள் உதவுகின்றன. மனிதனின் தேவைக்கு காடுகள் தொடர்ந்து அழிக்கப்படுகின்றன. இதனால் பூமி வெப்பமாகுதல், பருவநிலையில் மாற்றங்கள் ஏற்படுகிறது.

நன்மைகள்: மரங்கள் மனித வாழ்விற்கு தேவையான பிராண வாயுவை தயாரிக்கும் ஆலையாகும். இலைகளில் உள்ள பச்சையத்தை கொண்டு சூரிய ஒளி மற்றும் காற்றில் உள்ள கரியமில வாயுவை உட்கொண்டு, மனிதன் சுவாசிக்க தேவையான பிராணவாயுவை வெளியிடுகிறது.

மழையின்போது மழை துளிகள் நிலத்தில் நேரடியாக விழாமல் தடுத்து, இலைகளில் தாங்கி மெதுவாக நிலத்தில் விழ செய்து, நிலத்தில் உள்ள மேல் மண்ணை பாதுகாக்கிறது. வேர்களின் மூலம் மழைநீரின் வேகத்தை குறைத்து மண் அரிமானத்தை தடுக்கிறது. நீரின் ஓட்டத்தை கட்டுப்படுத்தி, நிலத்தடி நீர்மட்டம் உயர காரணமாகிறது.

ஒரு ஏக்கரில் உள்ள மரம், ஒரு கார் 26 ஆயிரம் கிலோ மீட்டர் கடக்கும் போது, வெளியிடும் கரியமில வாயுவினை உட்கொண்டு, மனிதன் சுவாசிக்க தேவையான ஆக்சிஜனை வெளியிடுவதாக ஆராய்ச்சியில் கூறப்பட்டுள்ளது. ஒரு ஏக்கரில் உள்ள மரம் 12 மனிதர்களுக்கு ஒரு ஆண்டுக்கு தேவையான

ஆக்சிஜனை வெளியிடுகிறது. மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை மரம் நம்முடன் பயணிக்கிறது.இவ்வளவு சிறப்பு மிக்க மரங்களை, விவசாயிகளின் நிலங்களில் மானியத்துடன் நடவு செய்ய கல்லல் வேளாண்மை துறை விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

வேளாண் உதவி இயக்குனர் கணேசன் கூறும்போது: நல்ல மண் ஆழம் கொண்ட வடிகால் வசதி உள்ள நிலங்கள் மரம் நடுவதற்கு ஏற்ற நிலங்கள். நிலத்தை தற்போது பெய்துள்ள கோடை மழையை கொண்டு உழவு செய்திடல் வேண்டும்.

அந்த நிலத்தில் 2 அடி ஆழம் ஒரு அடி அகலமுள்ள குழி தோண்டி, ஆற போட வேண்டும். குழிகளில் உயிர் உரமிட்டு தரமான கன்றுகள் நடவு செய்ய வேண்டும்.உழவுக்கு ரூ.5,000, குழியெடுக்க ரூ.15,000, உயிர் உரமிட்டு, மரக்கன்று நட ரூ.5 ஆயிரம் என ரூ.25 ஆயிரம் செலவாகும்.

இதில் அரசு மானியமாக ரூ.11,500 வழங்க உள்ளது. மேலும் ரூ.2,500-க்கு மரக்கன்று, ரூ.6 ஆயிரத்தில் உயிர் உரம் மானியமாக வழங்கப்பட உள்ளது. இதன் மூலம் ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

மூன்று ஆண்டு வரை, மரங்களின் இடைவெளியில் துவரை, உளுந்து, தட்டை பயிறு, கடலை சாகுபடி செய்யலாம். விவசாயிகள் கல்லல் வேளாண் உதவி மையத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**தக்காளியில் இடைத்தரகர் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி! நேரடி ஏல மையம் துவக்கும் விவசாயிகள்**



உடுமலை : தக்காளிக்கு செயற்கை விலை வீழ்ச்சி ஏற்படுத்தும் இடைத்தரகர்களின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க, விலை பட்டியல் வெளியிடுதல் மற்றும் நேரடி ஏல மையம் துவக்க, உடுமலை விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் வட்டாரங்களில் ஒவ்வொரு சீசனிலும், 30 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமாக தக்காளி பயிரிடப்படுகிறது. உற்பத்தியாகும் தக்காளியை, கமிஷன் மண்டி மற்றும் வியாபாரிகளுக்கு நேரடியாக, விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.பொள்ளாச்சி, திருப்பூர், ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில், தக்காளிக்கு கிடைக்கும் விலையை விட, உடுமலையில் பல மடங்கு விலை குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டு வந்தது. இதற்கு, இடைத்தரகர்களின் ஆதிக்கமே காரணம் என, விவசாயிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.
செயற்கையான விலை வீழ்ச்சியை தடுக்க வலியுறுத்தி, ஆர்.டி.ஓ., அலுவலகத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். "விவசாயிகள், வேளாண் விற்பனை வாரியம், வேளாண் பல்கலை உள்ளடக்கிய ஆலோசனை கூட்டம் நடத்தி, தக்காளியை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்,' என, வருவாய்த்துறை அதிகாரிகள் தரப்பில், உறுதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில், செயற்கை விலை வீழ்ச்சியை தடுக்க, விவசாயிகளே பல்வேறு அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். முதல்கட்டமாக, சந்தை நிலவரங்களை பிற பகுதிகளில் பெற்று, உடுமலை தினசரி சந்தை மற்றும் முக்கிய தனியார் கொள்முதல் மையங்கள் முன், தகவல் பலகை வைத்து, விலையை எழுதி வைக்க முடிவெடுத்துள்ளனர்.

இதனால், அனைத்து விவசாயிகளும் விலை நிலவரத்தை தெரிந்து கொள்வதுடன், இடைத்தரகர்கள் விலையை குறைப்பது தவிர்க்கப்படும். மேலும், தக்காளி அதிகம் விளையும் பகுதிகளில் உழவர் மன்றங்கள் அமைப்பது; உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், தக்காளி கொள்முதல் மையம் துவக்கி விற்பனை செய்வது என, விவசாயிகள் தரப்பில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறுகையில், "தக்காளி விற்பனையில், நிலவும் குளறுபடியை தவிர்க்க, பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதுதொடர்பாக, கிராமம் வாரியாக ஆலோசனை கூட்டம் நடத்தி வருகிறோம்.

அரசின் கவனத்துக்கும் மனு அனுப்பியுள்ளோம்,' என்றனர்.இத்திட்டங்கள் குறித்து, உடுமலை தாலுகா அலுவலகத்தில் நடந்த குறைதீர்ப்பு கூட்டத்திலும், வருவாய்த்துறை அதிகாரிகளிடம், விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஆபத்தில் நத்தம் மாங்காய்**



காந்திகிராமம்:திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் வெயிலின் தாக்கத்தால் மரத்திலே மா பிஞ்சுகள் வெம்பியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரில் மாமரங்கள் உள்ளன. இதில் 70 சதவீதம் நத்தம் பகுதியில் உள்ளன. இங்கு கல்லாமணி, நீலம், பங்கனப்பள்ளி, செந்துாரா போன்ற ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் விளையும் மாம்பழங்கள் தர்மபுரி, கிருஷ்ணகிரி 'ஜூஸ்' நிறுவனங்களுக்கு அனுப்பப் படுகின்றன.நத்தம் பகுதியில் 3 ஆண்டுகளாக வறட்சி நிலவுகிறது. அப்பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. வெப்பத்தால் பெரும்பாலான மரங்களில் மா பிஞ்சுகள் வெம்பியுள்ளன.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.காந்திகிராம பல்கலை வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப உதவியாளர் செந்தில்குமார் கூறியதாவது: மா மரங்கள் மானாவாரியாக சாகுபடி செய்யப்படுகின்றன.

இதனால் மழை பெய்தால் மட்டுமே மரங்களுக்கு நீர் கிடைக்கும். அப்பகுதியில் வறட்சி நிலவுவதால் நீர் பற்றாக்குறை உள்ளது.

வெயில் தாக்கமும் அதிகமாக உள்ளது. இதனால் மா பிஞ்சுகள் வெம்புகின்றன.சத்து குறைபாட்டாலும் பாதிப்பு ஏற்படும். மரங்களை கவாத்து செய்தால் இந்த பாதிப்பை குறைக்க முடியும், என்றார்

**ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில்முருங்கை, தக்காளி விலை உயர்வு**



ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கிலோ ரூ.15க்கு விற்ற முருங்கை ரூ.26 க்கும், ரூ.11க்கு விற்ற தக்காளி ரூ.15க்கும் உயர்ந்துள்ளது.

திண்டுக்கல்லை சுற்றியுள்ள மாவட்டங்களில் சில நாட்களாக கோடை மழை பெய்து வருகிறது. தக்காளி, முருங்கை செடியில் இருந்த பூக்கள் உதிர்ந்துவிட்டது. இதனால் காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. வியாபாரிகளுக்கு தேவையான அளவு காய்கறிகள் வராததால் விலை அதிகரித்துள்ளது. கடந்த ஞாயிறன்று ஒரு கிலோ ரூ.15க்கு விற்ற கரும்பு முருங்கை ரூ.26க்கும், ரூ.8க்கு விற்ற செடி முருங்கை ரூ.19க்கும், ரூ.4க்கு விற்ற மரம் முருங்கை ரூ.9 க்கும் விற்றது.

ஒரு கிலோ ரூ.11க்கு விற்ற தக்காளி ரூ.15க்கும் உயர்ந்துள்ளது. பீன்ஸ் ரூ.44 லிருந்து ரூ.50க்கும், பீர்க்கங்காய் ரூ.7லிருந்து ரூ.8க்கும், புடலை ரூ.8 லிருந்து ரூ.10க்கும் விற்பனையானது. பச்சை மிளகாய் (சம்பா ரகம்) ரூ.8 லிருந்து ரூ.14க்கும், உருண்டை ரகம் ரூ.16லிருந்து ரூ.27 க்கும் விற்றன.

ஆனால் பொரியல் தட்டப்பயிரின் விலை கிலோவிற்கு ரூ.2 குறைந்து ரூ.18க்கும், பாகற்காயின் விலை ரூ.1 குறைந்து ரூ.12க்கும் விற்றன. விலையில் எவ்வித மாற்றமின்றி பீட்ரூட் ரூ.4க்கும், பல்லாரி ரூ.18க்கும், வெண்டை ரூ.20க்கும், கொத்தவரை ரூ.13க்கும் விற்றன.

**விளைச்சல் குறைவு தேவை அதிகரிப்பால்உயர்ந்து வரும் தேங்காய் விலை**



ஆண்டிபட்டி:தேவை அதிகரித்துள்ள நிலையில் இளநீர் விற்பனை, தேவை அதிகரிப்பு ஆகியவற்றால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் அதிகளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு வந்தது. சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட தொடர் வறட்சியால் தென்னை மரங்கள் கருகத்துவங்கின. மேலும் நோய் தாக்குதலால் விவசாயிகள் தென்னை மரங்களை வெட்டி அழித்தனர். இதனால் மாவட்டத்தில் தென்னை சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்தது.

சென்ற ஆண்டு பருவமழை ஓரளவு கைகொடுத்ததால் வறட்சி மற்றும் நோய்தாக்குதலுக்கு தப்பிய தென்னை மரங்கள் காய்ப்புக்கு வந்தன.வருஷநாடு, மயிலாடும்பாறை, பாலக்கோம்பை, ராயவேலூர் பகுதிகளில் இருந்து தென்னை வரத்து பெருமளவு குறைந்துவிட்ட நிலையில் தற்போது கம்பம், பெரியகுளம், போடி பகுதிகளில் இருந்து தேங்காய்கள் மார்க்கெட்டிற்கு வருகிறது.

அவ்வப்போது ஏறி, இறங்கி வந்த தேங்காய் விலை சில வாரங்களாக ஏறுமுகத்தில் உள்ளது. கோடையால் தற்போது இளநீர் தேவை அதிகரித்துள்ளது. இளநீருக்கு தரமான விலை கிடைப்பதால், முழு வளர்ச்சிக்கு முன்பே இளநீராக விவசாயிகள் பறித்து விடுகின்றனர்.ஏப்ரல், மே மாதங்களில் கிராம கோயில் பொங்கல் விழாக்களுக்கான சீசன் துவங்கி நடந்துவருகிறது. இதனால் தேங்காய்களுக்கான தேவை பல மடங்கு அதிகரித்துள்ளது.

மூன்று முதல் ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட அளவில் சிறிய தேங்காய் தற்போது 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பெரிய அளவிலான தேங்காய் அதிகபட்சமாக 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

மொத்த வியாபாரிகள் எடை அடிப்படையில் தேங்காய்களை விற்பனை செய்வதாலும், நாளுக்கு நாள் தேவை அதிகரிப்பு, விளைச்சல் குறைவு காரணமாக தேங்காய் விலை உயர்வதாக சிறு வியாபாரிகள் தெரிவித்தனர்.

**அழிந்து வரும் அபூர்வ வடுமாங்காய்: காப்பாற்ற ஆய்வுகள் நடத்த முடிவு**

கம்பம்:வடுமாங்காய் பற்றிய ஆராய்ச்சியை பெங்களூருவில் உள்ள தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாம்பழத்தில் பல வகைகள் உள்ளன. அல்போன்சா, கல்லாமை, கிரேப்ஸ், மல்கோவா, காசாலட்டு உள்ளிட்ட பல ரகங்கள் உள்ளன. இந்த ரகங்கள் தேனி மாவட்டத்தில் பெரியகுளம், கம்பம், போடி, கூடலுார் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் சாகுபடி செய்யப்படுகிறது.ஆனால் ஊறுகாய்க்கு பயன்படுத்தப்படும் வடுமாங்காய் பெரியகுளம் பகுதியில் சோத்துப்பாறை, மஞ்சளாறு அணைப்பகுதிகள், சுருளி, கம்பம்மெட்டு மற்றும் போடிமெட்டு மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் மட்டும் கிடைக்கிறது.

வடுமாங்காய் சாகுபடி செய்யப்படுவது கிடையாது. வனப்பகுதிகளில் மானாவாரியாக விளையக் கூடியது. இவ்வகை மாங்காய்களை பழமாக மாற்றி சாப்பிட முடியாது. ஊறுகாய்க்கென பிரத்யேகமானது. இதற்கென தனி மார்க்கெட் உள்ளது.பெங்களூருவில் உள்ள தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தில் வடுமாங்காய் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தின் மலையடிவாரங்களில் கிடைக்கும் வடுமாங்காய் இலை, குச்சி போன்றவற்றை பெங்களூருவில் இருந்து வந்திருந்த தேசிய தோட்டக்கலை விஞ்ஞானி சங்கரன் சேகரித்து சென்றுள்ளார்.

தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: வடுமாங்காய் மிகவும் அபூர்வமானது. இவ்வகை மாங்காய்கள் வனப்பகுதிகளிலும், மலையடிவாரங்களிலும் மானாவாரியாக விளையும். சாகுபடி செய்வது கடினம். இதனுடைய பூர்வீகம் என்ன என்பது பற்றிய மரபணு ஆராய்ச்சி ஒன்றை தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மேற்கொள்ள உள்ளது. வடுமாங்காய் இனம் அழிந்து வரும் இனமாக இருப்பதால், இவ்வகை மா சாகுபடியை காப்பாற்ற திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது, என்றனர்.

**வாழை விவசாயிகளுக்கு அரசு வழங்குமா நிவாரணம்....! சூறாவளிக்காற்றில் சாய்ந்தன மரங்கள்**



மேலூர்: -மேலூரில் வீசிய சூறாவளிக்காற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைமரங்கள் சாய்ந்தன. விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புள்ளது.மேலூர் அருகே ஆட்டுக்குளம், எட்டிமங்கலம், சென்னகரம்பட்டி, காமாட்சிப்பட்டி, வல்லாளபட்டி உட்பட பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது.

பத்து மாதங்களுக்கு முன் பயிரிடப்பட்ட வாழைகள் தற்போது காய்கள் வெட்டும் நிலையில் இருந்தன.நேற்று முன்தினம் இரவு வீசிய சூறாவளிக்காற்றுக்கு கற்பூரவள்ளி, செவ்வாழை, நாடு போன்ற வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

சென்னகரம்பட்டி விவசாயிகள் செல்லத்துரை, வெள்ளாண்டி, அறிவுசெழியன், கவட்டயம்பட்டி திருமாறன் உட்பட பலரின் வாழைகளுக்கு சேதம் ஏற்பட்டது. லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். அதிகாரிகள் வாழைகளை பார்வையிட்டு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

விவசாயி செல்லத்துரை: பத்து மாதங்களுக்கு முன் வாழைக்கட்டை நடவு செய்தது முதல் தற்போது வரை கற்பூரவள்ளி, செவ்வாழைக்கு ஏக்கருக்கு லட்ச ரூபாய் எட்டிமங்கலம் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி விவசாயம் செய்தேன். சூறாவளிக்காற்றில் வாழைகள் சாய்ந்து விட்டன. லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடனை தள்ளுபடி செய்வதுடன் உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விவசாயப் பயிர்க் கடன் சலுகையை ரிசர்வ் வங்கி நிரந்தரமாக்க வேண்டும்**

ஏழு சதவீத வட்டியில் விவசாயப் பயிர்க் கடன் என்ற சலுகையை ரிசர்வ் வங்கி நிரந்தரமாக்க வேண்டும் என, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ. கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: ரிசர்வ் வங்கி 2015-16ஆம் ஆண்டு சிறப்பு விவசாயக் கடன் சலுகை அளித்ததில் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் 7 சதவீத வட்டியில் வழங்க வேண்டும் என்றும், குறித்த காலக்கெடுவில் அதை செலுத்தி முடித்தால் அதில் 3 சதவீத சலுகை வழங்கி, 4 சதவீத வட்டி மட்டும் வசூலிக்கலாம் என்று வங்கிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியது.

இச்சலுகையை 2015 மார்ச் 31ஆம் தேதியோடு முடித்துக்கொள்ளுமாறு அறிவித்தது. பின்னர், இதே சலுகையை ஜூன் இறுதி வரை நீட்டித்துள்ளது.

இப்படி அவ்வப்போது நீட்டிக்காமல் விவசாயப் பயிர்க் கடனுக்கு 7 சதவீத வட்டியை உறுதி செய்து, அதை ஒழுங்காக செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீத சலுகையை வழங்கி 4 சதவீத வட்டியை உறுதி செய்ய வேண்டும்.

விவசாயிகளுக்கு இந்த சலுகை நிரந்தரமாகக் கிடைக்கச் செய்ய வேண்டும். மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு ரிசர்வ் வங்கி தற்போது அதிகரிக்க இருக்கும் வட்டி விகித உயர்வைத் திரும்பப் பெறச் செய்வதோடு, வட்டி விகிதத்தைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

**கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை உயர்வு**

கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை திடீரென அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை கிலோ ரூ.18-க்கு விற்கப்பட்ட முதல்தர தக்காளி ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.7 அதிகரித்து, தற்போது ரூ.25-க்கு விற்கப்படுகிறது.

கோயம்பேடு சந்தையில் இந்த மாதத் தொடக்கத்தில் தக்காளி, உருளைக்கிழங்கு உள்பட பெரும்பாலான காய்கறிகளின் விலை கிலோ ரூ.15-க்கும் கீழ் விற்பனையானது. கடந்த மாதம் ரூ.150 வரை விற்கப்பட்ட முருங்கைக்காய் ரூ.20 ஆக குறைந்தது. ஆனால் தற்போது காய்கறிகளின் வரத்து குறையத் தொடங்கியதால் அவற்றின் விலை அதிகரிக்கத் தொடங்கியது. தக்காளியின் விலை ஞாயிற்றுக்கிழமை திடீரென அதிகரித்து காணப்பட்டது. மொத்த விலை கிலோ ரூ.25-க்கும் சில்லறை விலையில் ரூ.30 முதல் ரூ.35 வரையிலும் விற்கப்பட்டது.

இதுகுறித்து, தக்காளி வியாபாரிகள் சங்கத் தலைவர் தியாகராஜன் கூறியது: ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து கோயம்பேடு சந்தைக்கு கடந்த வாரத் தொடக்கத்தில் தினமும் 70 முதல் 80 லாரிகளில் சுமார் 800 டன் வரை தக்காளி விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்டது.

தற்போது அந்தப் பகுதிகளில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் கடந்த சில நாள்களாக தக்காளியின் வரத்து பாதியாகக் குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது. வரத்து தொடர்ந்து குறைந்து வருவதால் தக்காளி விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.

பிற காய்கறிகளைப் பொருத்தவரை அவரை, பாகற்காய், கேரட் ஆகியவை கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.5 வரை விலை உயர்ந்துள்ளன.

| | மொ.விலை | சி.விலை |
|---|---|---|
| உருளைக் கிழங்கு | ரூ.18 | ரூ.25 |
| கத்தரிக்காய் | ரூ.15 | ரூ.22 |
| அவரை | ரூ.35 | ரூ.42 |
| கேரட் | ரூ.30 | ரூ.36 |
| பீன்ஸ் | ரூ.75 | ரூ.90 |
| தக்காளி | ரூ.25 | ரூ.32 |
| பெரிய வெங்காயம் | ரூ. 20 | ரூ.26 |
| சின்ன வெங்காயம் | ரூ.30 | ரூ.40 |
| வெண்டைக்காய் | ரூ.25 | ரூ.35 |
| முருங்கைக்காய் | ரூ.30 | ரூ.40 |
| பீட்ரூட் | ரூ.12 | ரூ.20 |
| பாகற்காய் | ரூ.26 | ரூ.35 |
| பட்டர் பீன்ஸ் | ரூ.100 | ரூ.110 |
| பச்சை மிளகாய் | ரூ.20 | ரூ.30 |

**மல்லிகைப் பூ வரத்து திடீர் உயர்வு**

கடந்த சில நாள்களாக நிலவும் பருவநிலையால், மல்லிகைப் பூ வரத்து திடீரென அதிகரித்துள்ளது.

மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டுக்கு சராசரி அளவைக் காட்டிலும் கூடுதலாக மல்லிகைப் பூ வரத்து உள்ளது. ஞாயிற்றுக்கிழமை 10 டன் மல்லிகைப் பூ வரத்து இருந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

குளிர் காலத்துக்குப் பிறகு பிப்ரவரி மாதத்தில் மல்லிகைப் பூ சீசன் துவங்கிவிடும். அதன்பின்னர், சில மாதங்கள் மல்லிகைப் பூ வரத்து இயல்பாக அதிகரிக்கும். கடந்த சில நாள்களாக, வெயிலும் மழையும் மாறி மாறி நிலவும் சூழல் மல்லிகைப் பூ விளைச்சலுக்கு உகந்ததாக உள்ளது. இதனால், இப்பூவின் வரத்து மேலும் அதிகரித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலை மல்லிகைப் பூ கிலோ ரூ.100 ஆகவும், மாலையில் விலை ரூ. 80 ஆகவும் இருந்தது. பூக்கள் வரத்து அதிகரித்தபோதும், அஷ்டமி காரணமாக வியாபாரிகள் கொள்முதல் செய்வது குறைந்து காணப்பட்டது.

விலை நிலவரம் (கிலோவுக்கு): கோழிக்கொண்டைப் பூ ரூ. 20, சம்பங்கி ரூ. 60, முல்லை ரூ. 15, தாமரை (ஒன்று) ரூ. 3, பிச்சிப் பூ ரூ. 120, கனகாம்பரம் ரூ. 200.

**அறிவியல் வளர்ச்சி மக்களை பாதிக்கக் கூடாது**

பயிர்களில் மரபணு மாற்றம் உள்ளிட்ட மக்களைப் பாதிக்கும் அறிவியல் வளர்ச்சிகளை விவசாயத்துக்கு பயன்படுத்தக் கூடாது என, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ். நடராஜன் வலியுறுத்தியுள்ளார்.

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நமது மண்வாசம் மாத இதழ் வெளியீட்டு விழாவில், அவர் பங்கேற்று மேலும் பேசியது:

தமிழகத்தில் 451 வகையான மண் உள்ளது. ஒவ்வொரு மண்ணுக்கும் ஒவ்வொரு வாசம் உண்டு. மேலும், விவசாயம், தொழில்நுட்பங்களைச் சார்ந்து மக்கள் உள்ளனர். இதில், பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். தானியங்கள் மற்றும் காய்கறிகளை விளைவிக்கும் விவசாயிகளுக்கு, அவற்றை சந்தைப்படுத்தத் தெரிவதில்லை. அதனாலேயே பல விவசாயிகள் நஷ்டமடைகின்றனர். முதலில், விளைபொருள்களை சந்தைப்படுத்தும் முறையை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதிக விளைச்சல் தரும் என்பதற்காக மரபணு மாற்றம் செய்யப்பட்டவைகளை விளைவிக்காதீர்கள். அது நமது சந்ததியினரை பாதிக்கும். தற்போது, தேனி அருகே நியூட்ரினோ ஆய்வுக்கூடம் அமைக்க பல்வேறு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். ஆனால், அதில் பாதிப்பில்லை என அறிவியல் அறிஞர்கள் விளக்கமளிக்கின்றனர். அறிவியல் வளர்ச்சி என்பது மக்களையும், இயற்கையையும் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்றார்.

பேராசிரியர் கு. ஞானசாம்பந்தன் பேசியது: ஒரு செய்தியை படித்தவுடன் மக்கள் அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். அதுபோன்ற செய்திகள் தற்போது குறைந்து வருகிறது. பெற்றோர்கள் நியூமராலஜி, ராசி பார்த்து குழந்தைகளுக்கு வேற்று மொழி பெயர் வைக்கின்றனர். குழந்தைகள் தமிழில் பேசுவதை பெற்றோர்கள் விரும்புவதில்லை.

அதனால், குழந்தைகளுக்கு தமிழ் ஆர்வம் குறைந்து வருகிறது. குழந்தைகளுக்கு பழைய வரலாறுகளைச் சொல்லித் தரவேண்டும். தற்போது நடைபெற்றுவரும் சித்திரைத் திருவிழா குறித்த செய்திகளையும், சிவபெருமானின் 64 திருவிளையாடல்களில் பெரும்பாலானவை மதுரையில் நடந்தவை என்பதையும் குழந்தைகளிடம் கூறுங்கள். திருக்குறள் படிக்கச் சொல்லுங்கள் என்றார்.

நிகழ்ச்சியில், காந்தி நினைவு அருங்காட்சியகச் செயலர் மா.பா. குருசாமி, நமது மண்வாசம் இதழ் ஆசிரியர் ப. திருமலை, மூத்தப் பத்திரிகையாளர் சூ. அண்ணாமலை, தானம் வயலக கண்மாய் அறக்கட்டளை திட்டத் தலைவர் ஜோ. கனகவல்லி, ச. சிங்கராயர், மு. பழனிச்சாமி, பி. கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பனை பொருள்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும்**

பனைமரத்தில் இருந்து கிடைக்கும் வெல்லம், பதநீர், நுங்கு உள்ளிட்ட பொருள்களை அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்று, மாநில நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.

சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு பனைமரம் ஏறும் போட்டி, தாரமங்கலம் அருகேயுள்ள சிக்கம்பட்டியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சேலம், நாமக்கல் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு விற்பனை சம்மேளனம் சார்பில் நடைபெற்ற போட்டியில்

200-க்கும் மேற்பட்ட பனைமரம் ஏறும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியில், முதல் மூன்று இடங்களைப் பிடித்த தொழிலாளர்களுக்கு அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி பரிசுகளை வழங்கிப் பேசியது:

பனை மரத்தில் இருந்து கிடைக்கக் கூடிய பதநீர்,வெல்லம், நுங்கு உள்ளிட்ட பொருள்களை அதிக அளவில் மக்கள் பயன்படுத்த வேண்டும். கோடை காலங்களில் குளிர்பானங்களைத் தவிர்த்து பனை மரத்தில் இருந்து கிடைக்கக் கூடிய பொருள்களை பயன்படுத்த வேண்டும். பனைமரத்தின் மீது ஏறி பதநீர் இறக்குவது கடினமான ஒன்று.

அந்தத் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கவே இதுபோன்ற போட்டிகளைத் தமிழக அரசு நடத்துகிறது என்றார்.

இந்த விழாவில் சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.செல்வராஜ், ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் பல்பாக்கி சி.கிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாறாக, சாகுபடி செய்த விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

குறுகிய காலப் பயிர், குறைந்த நீர், சாகுபடி செலவுக் குறைவு என்பன உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பந்தட்டை ஒன்றியங்களில் சுமார் 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெங்காயமே பிரதான சாகுபடிப் பயிராகும்.

நிகழாண்டில், 6,432 ஹெக்டேரில் அதாவது 15,887 ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வெங்காய உற்பத்தியில் தமிழகத்தில் பெரம்பலூர் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.மேலும், 3 மாதப் பயிரான சின்ன வெங்காயம் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், கேரளத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் லாரிகளில் நாள்தோறும் அனுப்பப்பட்டு வந்தது.

கடந்த 2 மாதங்களுக்கு முன், தரமான ஒரு டன் சின்ன வெங்காயம் ரூ. 25 ஆயிரத்துக்கு விற்பனையானது. தற்போது, அதே வெங்காயம் ரூ. 10 ஆயிரத்துக்கு விற்பனையாகிறது. மேலும், தற்போது அறுவடை செய்யப்பட்டுள்ள வெங்காயத்துக்கு உரிய விலை கிடைக்காததால், விவசாயிகள் தங்களது வயல்களிலேயே பட்டறை அமைத்து பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து, இரூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி எ. நடேசன் கூறியது: ஏக்கருக்கு ரூ. 1.25 லட்சம் வரை செலவாகியது. கடந்த காலங்களில், அதிகபட்சமாக ரூ. 24-க்கு விற்பனையான ஒரு கிலோ வெங்காயம்,தற்போது ரூ. 12-க்கு விற்பனையாகிறது. வெளி மாநில வெங்காய வரத்து, அதிகப்படியான உற்பத்தி போன்றவையே விலை குறைவுக்கு காரணமாகிறது.

செட்டிக்குளத்தில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்பட்டால் விலை உயரும் பட்சத்தில் விற்பனை செய்யலாம் என விவசாயிகள் காத்திருந்த நிலையில், அங்குள்ள குளிர்பதன கிடங்கு செயல்படாதது விவசாயிகளிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்க உபரியாகும் வெங்காயத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

# தினகரன்

**கால்நடை வளத்தை பெருக்க ஒவ்வொரு கிராமத்திலும் பால்பண்ணை குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

தஞ்சை, : கால்நடை வளத்தை பெருக்க ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய அளவிலான பால்பண்ணை அமைக்க வேண்டுமென குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

டிஆர்ஓ சந்திரசேகரன் தலைமை வகித்தார். கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:

சாமி நடராஜன் (தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர்): நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் பாசன ஆறுகள், வாய்க்கால்களில் மே மாதத்துக்குள் தூர்வார வேண்டும். மாவட்டம் முழுவதும் விவசாயத்துக்கான மின் இணைப்புகளுக்கு சுய விருப்ப திட்டத்தில் ரூ.25 ஆயிரம், ரூ.50 ஆயிரம் கட்டி பல ஆண்டுகளாக காத்திருக்கும் விவசாயிகளுக்கு உடனே இணைப்பு வழங்க வேண்டும்.

கோவிந்தராஜ் (கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர்): தமிழக அரசு கரும்பு விலை டன்னுக்கு ரூ.4 ஆயிரம் அறிவிக்க வேண்டும்.

முத்தரப்பு கூட்டத்தை கூட்டி இந்த தொகையை காலதாமதமின்றி அறிவிக்க வேண்டும். குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் இணை மின் நிலைய பணிகளை இந்த ஆண்டே துவங்க வேண்டும். இல்லையெனில் பங்குதாரர்கள் கூட்டத்தை நடத்த விடமாட்டோம்.ரவிச்சந்திரன் (காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர்): தஞ்சை மாவட்டத்தில் பால் வளம் குறைந்துள்ளது. பல கிராமங்களில் மாடுகள் வளர்ப்பு குறைந்து பாக்கெட் பால் பயன்பாட்டு க்கு வந்துவிட்டது. கால்நடை வளர்ப்பை பெருக்க ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய அளவிலான பால்பண்ணை துவங்க வேண்டும். இதற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்க வேண்டும்.

செந்தில்குமார் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநகர செயலாளர்): வெண்ணாறு கோட்டம் வெட்டாற்றிலிருந்து பிரியும் மெலட்டூர் வாய்க்கால் தலைப்பிலிருந்து செல்லும் காட்டுக்குறிச்சி வாய்க்கால் கடந்த பல ஆண்டுகளாக தூர்வாராமல் உள்ளது.
விமல்நாதன் (தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க செயலாளர்): தேசிய மயமாக்கப்பட்ட வங்களில் விவசாய கடன் வட்டி முன்னறிவிப்பின்றி 11 சதவீதமாக உயர்த்தியிருப்பது விவசாயிகளை மேலும் தற்கொலைக்கு தூண்டும். தமிழக அரசு தேசிய மயமாக்கப்பட்ட வங்களிலும் வட்டியில்லாத விவசாய கடன்தர வேண்டும். கரும்புக்கான கூடுதல் விலை அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை கூடுதல் விலை வழங்கப்படாமல் உள்ளது. வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூட கிடங்குகளை இடைத்தரகர்களும், வியாபாரிகளும் முறைகேடாக பயன்படுத்துகின்றனர். இதை தடுக்க ஆய்வு நடத்த வேண்டும் என்றார். திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பம்: மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க துணை செயலாளர் திருப்பூந்துருத்தி சுகுமாரன் பேசுகையில், தோட்டக்கலை துறை சார்பில் தென்னை, வாழை பயிரிடும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து

தரப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்காக எங்கள் பகுதியை சேர்ந்த விவசாயிகள் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை, சிறு மற்றும் குறு விவசாயி என்று அனைத்து சான்றுகளையும் 20 நாட்களுக்கு மேல் அலைந்து திரிந்து வாங்கினோம். இதன்பின்னர் சொட்டு நீர் பாசனம் அமைக்க விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுத்தோம். ஓராண்டுக்கு பின்னர் கடந்த சில நாட்களுக்கு முன் அனைத்து விவசாயிகளுக்கும் தோட்டக்கலை துறையில் போதிய நிதியில்லை என்று கூறி விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

2.70 லட்சம் டன் நெல் கொள்முதல்

டிஆர்ஓ சந்திரசேகரன் பேசியதாவது: தஞ்சை மாவட்டத்தில் 2015 16ம் ஆண்டுக்கு குறுவை பருவத்தில் 43,000 எக்டேரில் நெல் சாகுபடி செய்ய இலக்கு அளிக்கப்பட்டு இதுவரை 540 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பருவத்தில் ஆடுதுறை 36, ஆடுதுறை 43, ஆடுதுறை 45 ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிது. குறுவை பருவத்துக்கான நாற்றங்கால் 170 எக்டேரில் உள்ளது. பயறுவகை பயிர்கள் 603 எக்டேரிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 150 எக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்துக்கான பயறுவகை பயிர் ரகங்களான ஆடுதுறை 5 விதைகள் 50 மெட்ரிக் டன் அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தஞ்சையில் 23, திருவையாறில் 23, ஒரத்தநாட்டில் 15, பட்டுக்கோட்டையில் 28, பேராவூரணியில் 15, கும்பகோணத்தில் 9, பாபநாசத்தில் 17 என்று மொத்தமாக 139 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்குகிறது. இந்த கொள்முதல் நிலையங்கள் வாயிலாக கடந்த அக்டோபர் 1 முதல் ஏப்ரல் 20ம் தேதி வரை 2,70,995 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதே தேதியில் கடந்தாண்டு 3 லட்சம் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது என்றார்.